# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)

***2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***212 ஆம் சட்டமூலம்*** ]

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007077 -650 (2013/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2***: *இவ்வாசகமானது 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது -*

*(அ) ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனத்தினால் கட்டணம் இன்றி ஏதேனும் சேவையை வழங்குவதற்கென திரட்டுநிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதியங்கள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஏதேனும் கடன்; அத்துடன்*

*(ஆ) ஏதேனும் சேதனப் பசளையின் உற்பத்தியாளரினால் ஏதேனும் அத்தகைய உற்பத்திப் பொருளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்,*

*பொருளாதார சேவை விதிப்பனவு நோக்கங்களுக்காக மொத்த விற்பனை வரவிலிருப்பதிலிருந்து தவிர்ப்பதற்காகும்.*

***வாசகம் 3***: *இவ்வாசகமானது 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பொருளாதாரச் சேவை விதிப்பனவிலிருந்தான இலங்கை மத்திய வங்கியைத் தவிர்ப்பதற்காகும்.*

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு
## (திருத்தம்)

ச.வ.ஒ 1/2013

**2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

**1.** இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2012ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானதுஅப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவால் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் ''இருக்குமிடத்து, அத்தகைய'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இருக்குமிடத்து, எந்த மொத்த விற்பனை வரவிலிருந்தான இலாபங்கள் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த ஏதேனும் மொத்த விற்பனை வரவு தவிர்ந்த அத்தகைய'';

(2) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தில் ''வருவாய்கள்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக''வருவாய்கள்;''; அத்துடன்

(3) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும்:-''

(x) அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனத்தினால் கட்டணம் இன்றி ஏதேனும் சேவையை வழங்குவதற்கென திரட்டுநிதியிலிருந்து

2-PL 007003 -225 (2013/02)

பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் கடன் ; அத்துடன்

(xi) ஏதேனும் சேதனப் பசளையின் உற்பத்தியாளரினால் அத்தகைய உற்பத்திப் பொருளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்; அத்துடன்''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க,சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது''ஆள்''என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) (ஊ) என்னும் பந்தியில் ''பரஸ்பரநிதியத்தை,'',என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பரஸ்பரநிதியத்தை; அத்துடன்''; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) (ஊ) என்னும் பந்தியினைஉடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(எ) இலங்கை மத்திய வங்கி,''.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்